மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இப்படி இடையூறை அகற்ற வேண்டும் என்கிறவர்களே அகற்றிவிட்டால் வெளியில் அதை எங்களுக்கு விரோதமான அரசியலுக்குப் பயன்படுத்துகிருர்கள். இப்படிப்பட்ட தடைகள் எல்லாம் அங்கங்கே உள்ள துறையின் மூலமாகத்தான் அகற்ற பரிசீலனை செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிக்கை அளித்தல்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்பற்றிய மதிப்பீட்டு குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீது மதிப்பீட்டு குழுவின் அறிக்கை.

THIRU K. VEZHAVENDAN: Hon. Speaker, Sir, I rise to present the report of the Committee on Estimates on the action taken on the recommendations of the Committee contained in the Report on Community Development Projects.

(3) 1971–72-ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைத் தலைவர் அவர்களே, 1971–72-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் கண் வைக்க முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை ரூ. 116.34 கோடியாகும். இதில் ரூ. 29.88 கோடி மட்டுமே அனுமதித்த இனங்களின் கீழ்வரும்; எஞ்சிய ரூ. 86.46 கோடி சாட்டிய இனங்களைச் சார்ந்தனவாகும்.

தற்போது கோரப்படும் நிதி ஒதுக்கத்தில் கணிசமான பகுதி, மத்திய அரசுக்கும் ரிசர்வ் வங்கிக்கும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குரியதாகும். இதற்கென 80.67 கோடி ரூபாய் அளவிற்கு இத் துணை மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. இப்பெருந்